www.padippakam.com

# வெகுஜனம்

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

மறந்து போகுமா இரத்த ஜூலை



வெலிக்கடைப் படுகொலை 6ம் ஆண்டு நினைவு

ஜனம்-2 யூன்-யூலை 1989 குரல்-2

படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீர் அஞ்சலி





தமிழ் அரசுக்கட்சியின் முக்கியஸ்தரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகர்களிலொருவருஞ், செயலாளர் நாயகமும், பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவருமான திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் தமிழ் விடுதலைக் கூட்டணி பிரமுகரும் முன்னாள் யாழ்ப்பாண தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வெற்றிவேல் யோகேஸ்வரனும் 13.7.1989ல் அராஜகவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா இனவெறி அரசு தனது தமிழ் அரசியல் எதிரிகளை அழிப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள ஆயுதம் தாங்கியவர்களையே புத்திசாலித் தனமாக பாவித்துள்ளது இன்று குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனநாயக வாதிகளை படுகொலை செய்துள்ள வரலாற்று துரோகத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

THOONDIL

# எமது எண்ணங்கள்

வணக்கம்.

அமெரிக்காவின் இராணுவ அதிகாரிகள், பாகிஸ்தான் அதி உயர் இராணுவ தளபதிகள் திருகோணமலையில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ. கடற்படை முகாம்களுக்கு வந்து போயுள்ளார்கள் எனவும் மொசாட் அதிகாரிகள் கொழும்பில் உள்ளதுடன் அமெரிக்க தூதரகத்திற்கு வந்து போயுள்ளார்கள் எனவும் செய்திகள் கூறுகின்றன. அமைதி சூழலுக்கும் வழமையான வாழ்க்கைக்கும் தமிழ் பேசும் மக்கள் திரும்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இவ்வேளையில் இனவாத அரசின் இந்நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின், பிரச்சனை தீர்வின், இந்திய உபகண்டத்தின் அமைதியை குலைப்பதற்கான நடவடிக்கைகளாகவே கருதுகின்றோம்.

சமாதான ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச உரிமைகளை கொடுக்காமல் மறுப்பதற்கும் தமிழ் பேசும் மக்கள் இந்த இடைவெளியில் ஆறுதல் அடைவதை இல்லாமல் செய்து மீண்டும் பாரிய யுத்தங்களினை ஏற்படுத்துவதற்கும் இனவெறி அரசு மேற்கொள்ளும் இக்கபட நாடகத்தில் தமிழ் பேசும் மக்களின் தலைமைகள் சிக்கி தமது மக்களை அழிக்க, எமது மக்களின் உரிமைகளை இழக்க தாமே காரணமாகாது விழிப்பாக இருக்கும்படி மக்களின் நலன் கருதி வேண்டுகோள் விடுக்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

இனவாதத்திற்கு எதிரணியாய் அணிதிரள்வோம்

ஜே.வி.பி பயங்கரவாத இயக்கமானது அதன் உச்சக்கட்டமாக இந்திய துவேஷப் பிரச்சாரங்களை, நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. இந் நடவடிக்கைகள் பல்வகை மக்கள் மத்தியில் பாரிய பாதிப்புகளை, விளைவுகளை ஏற்படுத்துவதோடு வடக்கு கிழக்கு மக்களுக்கு அமைதியும் சமாதானமும் ஏற்படாமல் தடுக்கும் என்பதால் வன்மையாக கண்டிக்கின்றோம். பம்-பாய் வெங்காயம் என்றுசொல்லக்கூடாது பம்பாய் வெங்-காயம் விற்கக்கூடாது என்று ஜே.வி.பியினர் அறிவித்ததும் அரசு விழுந்தடித்துக் கொண்டு பாகிஸ்தானிலிருந்து வெங் காயம் இறக்கியுள்ளோம் என்று அறிவித்ததிலிருந்தே ஜே.வி பி + ஸ்ரீலங்கா அரசின் கூட்டுக்கள் வெளிப்படையாகி யுள்ளதோடு இந்திய துவேஷ நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங் கா அரசு எவ்வளவு தூரம் போகிறது என்பதும் தெளிவாகிறது

தமிழ் பேசும் மாணவர்களை ஆயுதம் தரித்தவர்கள் இந்திய இராணுவத்தினர் கைது செய்வதற்கும், கல்விக்கூடங் களுக்குள் ஆயுதங்களுடன் அத்துமீறிப் பிரவேசிப்பதற்கும் நமது எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். இவற்றுக்கு எதிரான மா ணவர்களின் அமைதிவழி போராட்டத்திற்கு நமது முழு ஆதரவை வழங்குகின்றோம். 86ம் ஆண்டு விஜிதரன் என்னும் மாணவன் படுகொலை செய்யப்பட்ட போது இவ்வாறான நடவ டிக்கைகளுக்கு எதிராக மாணவர்கள் தமது எதிர்ப்பை காட்ட முடியாதவாறு குரல் கொடுக்கமுடியாதவாறு மாணவர்களின் செ யல்கள் நெரிக்கப்பட்டிருந்தது, ஜனநாயகம் மறுக்க பட்டிருந்தது இவற்றுக்கு முடிவாயும் விஜிதரனுக்காக உண்ணாவிரதம் இருந்த மாணவர்களில் விமலேஸ்வரன் போன்றோர் அதன் எதிரொலியாக கொலைசெய்யப்பட்ட போது இக்கொலையை கண்டித்து ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட முடியாத அளவுக்கு மாணவர்களின் குரல்வளை நெரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று மாண வர்கள் தமது உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் மனவுறு

www.padippakam.com

ஜனநாயகச் சூழல் உருவாகியுள்ளமையை எண்ணி மகிழ்ச்சியடைகிறோம்.

# ஆபிரிக்கத்து மக்களின்

# ஈடிணையற்ற தலைவா !



ஆபிரிக்க கறுப்பின மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவர்.

வெள்ளையரின் ஆதிக்க போக்குக்கு சாவுமணி அடிக்கப் புறப்பட்ட மாவீரன்.

தென்னாபிரிக்காவுக்கு சொந்தமான கறுப்பின மக்களின் பெரும்பான்மை ஆட்சியே நாட்டையாள வேண்டும். என விடுதலைப்போர் நடாத்திவரும் ஆபிரிக்க காங்கிரஸின் தலைவர்.

1962ம் ஆண்டு முதல் 27 வருடங்கள் சிறையில் வாடுபவரும் 1964ம் ஆண்டு முதல் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவருமான தோழர் நெல்சன் மண்டேலாவின் 71வது பிறந்ததினம் ஆடி 18.



படிப்பகம்

www.padippakam.com

# இணைப்புக்கு ஒரு கண்ணிவெடி

அ. கதிர்ப்பிள்

தமிழ் பேசும் மக்களின் இணைப் பிரச்சினை கூர்மை அடைந்து வந்துள்ளமைக்கு முக்கிய காரணிகளாய் விளங்குபவைகளில் அதிமுக்கியமானது இலங்கை அரசுகளினால் திரைமறைவுக்குள் நடாத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களாகும். கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் ஆங்காங்கு பெரும்பான்மையினர் குடியேற்றப்பட்டு வந்த போதும் வெலி ஓயா குடியேற்ற திட்டமே பெரிய சர்ச்சைக்குரியதும் வடக்கு கிழக்கு இணைவுக்கு பெரும் ஆபத்தானதாகவும் விளங்குகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இடையில் உள்ள மணல் ஆறு என்று அழைக்கப்பட்ட பிரதேசமே இப்போது வெலி ஓயா என்று பெயர் சூட்டப்பட்டுள்ள குடியேற்றத்திட்டப்பகுதியாகும்.


கொக்கிளாய், நாயாறு, கருநாட்டுக்கேணி, கொக்கு தொடுவாய், ஒதியமலை, பெரிய குளம், தனிக்கல்லு, உடங்கா போன்ற 43 கிராமங்களை உள்ளடக்கியுள்ள இக்குடியேற்றத்தினால் வடக்கும் கிழக்கும் துண்டாடப்படும் அபாயம் உண்டு. வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டுள்ள போதும் வெலி ஓயா நடைமுறையில் பிரித்தே வைத்திருக்கிறது. அத்தோடு புல்மோட்டைக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட சுமார் 20 கிராமங்கள் (கரையோரப்பகுதிகள்) அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


படிப்பகம்

1971ம் ஆண்டில் மகாவலி - எல திட்டமென இப்பகுதி அறிவிக்கப்பட்டதாயினும் 22-12-1984 லிருந்தே மணல் ஆற்றுப்பகுதியில் குடியேற்றத்திற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

22.12.84ல் இப்பகுதியில் 80 சதுர மைல் பிரதேசம் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பகுதிக்குள் யாரும் வசிக்கவோ பிரவேசிக்கவோ தடை விதிக்கப்பட்டதால் இங்கு வாழ்ந்த மக்கள் தமது வீடு வாசல்கள், தோட்டங்கள், பண்ணைகள் அனைத்தையும் விட்டு உடுத்த உடையுடன் வெளியேறி பாடசாலைகளிலும், மாட்டுத் தொழுவங்களிலும், மர நிழல்களிலும் அகதிகளாக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டனர்.

மக்களை பலவந்தமாக இரவோடிரவாக வெளியேற்றிய ஸ்ரீலங்கா இராணுவம் இப்பகுதியில் உள்ள வீடுகள், கடைகள், பொருளாதார வளங்கள், பாடசாலைகள் மற்றும் டொலர், கென்ற், முந்திரிகைக்குளம் போன்ற



www.padippakam.com

(ஒவ்வொன்றும் நூறு ஏக்கருக்கு மேற்பட்டவை) பதினெந்து பண்ணைகள் யாவற்றையும் அழித்து நாசப்படுத்தியது. இலங்கை இராணுவத்தைத் தவிர மனித சஞ்சாரமேயற்ற பகுதியாக இப்பகுதி ஆக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான பொருளாதார வளங்கள் யாவும் இம்மணல் ஆற்றுப் பிரதேசத்தில் தான் இருந்தன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சமாதான ஒப்பந்தம் வரை மூவாயிரம் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். ஒப்பந்தத்தின் பின்பு மேலும் இரண்டாயிரம் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதுவரை 13500 தமிழ் பேசும் மக்கள் இப்பகுதிகளிலிருந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் அதிகாரத்துக்குட்பட்ட மணல் ஆற்றுப் பகுதி அவருக்கு எதுவுமே தெரியாமல் அனுராதபுரம் அரசாங்க அதிபர் மூலமாகவே சகல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கில் உள்ள மணல் ஆற்றுப்பகுதி 5 ஆயிரம் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதுடன் 15.4.88ல் பாராளுமன்றத்தில் மகாவலி திறப்பு பிரதேசமென வெலிஓயா என பெயர் சூட்டப்பட்டு காணி அபிவிருத்தி அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்டது. வடக்கில் உள்ள வெலிஓயாவை அனுராதபுர அரச அதிபரே நிர்வகித்து வருகிறார். மூன்று ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய பாடசாலைகள், தபாற்கந்தோர், கூட்டுறவு வங்கி ஆகியன உருவாக்கப்பட்டுள்ளது. கூற்கரையே கண்டஅராத அனுராதபுரம் வெலிஓயாவை தன்னுடன் இணைத்துக் கொண்டதால் வெலிஓயா அனுராதபுரத்தின் கிழக்குப் பகுதியாக வந்துள்ளது. வெலிஓயாவில் குடியேறிய சிங்கள மக்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக மாதம் 800 ரூபா குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. இங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ள 13500 தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

பேசும் அகதிகள் குடியிரு
க்க இடமில்லை, தொழில் வளம்
இல்லை, பாதுகாப்பு இல்லை. வெலி
ஓயா குடியேற்றத்திட்டத்தி
ற்கென இதுவரை 15 கோடி
யே பத்து இலட்சம் ரூபா
செலவிடப்பட்டுள்ளது.
நாசகார சக்திகள் சமனைட
வதற்கான நிலையங்கள் தொ
டர்பான அரசவர்த்தமானி
அறிவிப்பு ஒன்றில் (இத்தி
ரை 89) வெலி ஓயா
மாவட்டம் என அறிவிக்
கப்பட்டது. இது தொட
ர்பாக திரு. அ. அமிர்தலிங்
கம் பாராளுமன்றத்தில் கேள்
வி எழுப்பிய போது வெலி
ஓயா மாவட்டம் என்றொரு
மாவட்டம் இல்லை. இதுபாது
காப்பு அமைச்சின் தவறுதலா
ன அறிவிப்பு என்று பாது
காப்பு அமைச்சர் திரு. ரஞ்சன்
விஜேரட்ண கூறினார்.

வடக்கு
கிழக்கு மாகாண அரசு
கூட்டத் தொடரில் வெலி
ஓயா மாவட்டம், குடியே
ற்றம் தொடர்பாக பல ஆளு
ங்கட்சி, எதிர்கட்சி உறுப்
பினர்கள் கண்டன குரல்
எழுப்பினர். முதலமைச்சர்
திரு. அ. வரதராஜப் பெரு
மாள் இது தொடர்பாக பே
சுகையில் வெலி ஓயா மட்
டுமல்ல தமிழ் பிரதேசங்களில்
மேற்கொள்ளப்பட்டு வரும்
எந்த ஒரு குடியேற்றத்தை
யும் இனிமேல் அனுமதிக்க
முடியாது என்றார்.
இது தொடர்பாக ஈ.ரோஸ்
அமைப்பு ஆரம்பத்திலிருந்தே
அறிக்கைகள் வெளியிட்டுள்ள
தோடு "வெலிஓயா அந்தமிற
ல்கள்" என்னும் நூலும் வெளி
யிட்டுள்ளது. அதில் இது
பற்றிய பலவிபரங்கள் தெரிவி
க்கப்பட்டுள்ளது. கடந்த
கால ஒப்பந்தங்களிலும் சரி
இப்போதைய சமாதான ஒப்
பந்தத்திலும் சரி தமிழ் பேசும்
மக்களின் இனப்பிரச்சனைத்
தீர்வில் முக்கிய அம்சமான
திட்டமிட்ட குடியேற்றங்
கள் தொடர்பாக ஸ்ரீலங்
கா இனவாத அரசுகள்
மௌனம் சாதிப்பதும் உதா
சீனம் செய்வதும் திரைமறை
வில் குடியேற்றங்கள் தொட
ர்வதும் தொடர்ந்து வருவதும்
தெளிவாகிறது.

22.12.84க்கு
பின்பு அதாவது ஈழவிடுத


படிப்பகம்

www.padippakam.com

லைப் போராட்ட காலத்திலும் ஒப்பந்தத்தின் பின்பும் வெலி ஓயா குடியேற்றம் மும்முரமாக நடைபெற்றுள்ளது. இதற்கான காரணம் என்ன? இயக்கங்கள் ஐக்கியப்பட்டு இவற்றுக்கெதிராகப் போராடத் தவறியமையே யாகும். தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் எந்தப் பகுதியை நோக்கினாலும் இயக்கங்களின் ஐக்கியம் முக்கியமாகிறது.

வெலி ஓயா வடக்கு கிழக்கை பிரிக்க வந்துள்ள கண்ணிவெடி இன்று புதிதாக தலைமையேற்றுள்ள தமிழ் பேசும் மக்களின் புதிய இனம் தலைமைகள் இதற்கு உடனடி நிவாரணம் தேடாவிடின் இப்புற்றுநோய் வடக்கு கிழக்கை உட்புறமாக அரித்துவிடும். இறுதியில் இணைந்த வடக்கு கிழக்கு என்பதும் பெயரளவில் தான் மிஞ்சும்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல், மாகாண அரசுக்கான அதிகாரங்களைப் பெறுவதில் வடக்கு கிழக்கு மாகாண அரசு ஜனநாயக ரீதியாகப் போராடுவதைப் போல் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு எதிராக மக்கள் அணிதிரட்டி மக்கள் போராட்டங்களை நடாத்த மாகாண அரசு முன்வரவேண்டும். இதற்கான ஒத்துழைப்புகளை அனைத்து இயக்கங்களும் கட்சிகளும் (தமக்கிடையிலான முரண்பாடுகளை தூக்கி ஓர் புறம் வைத்துவிட்டு) ஒன்றிணைந்து வழங்க முன்வர வேண்டும். சிங்கள மக்களும், தமிழ் பேசும் மக்களும் சகோதரத்துடனும் ஐக்கியத்துடனும் வாழ வேண்டும் என்பதை வரவேற்கும் அதே வேளையில் வஞ்சகத்தனமான திட்டமிட்ட குடியேற்றங்களால் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களின் ஆணிவேரையே அறுக்கும் வேலையை எவரும் அனுமதிக்கமாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# எழுண்டா தமிழ் காக்க

கவிதை

வேங்கடை

சொக்கனுக்குத் தமிழ் தெரியா
சுந்தரனை பித்தன் என்றான்
நக்கீரனோ அவனை மிஞ்சி விட்டான்
நான் தன்மையது முன்னிலையில்
நீயாக படர்க்கையிலே
அவனென்று
தமிழ் இலக்கணம் தான் கூற
உயிர் மெய் என்றும்
உயிர் மெய் ஆய்தமென்று
நெடுங் கணக்கில் வரா
வெளிக்கடைச் சிறையையே மிஞ்சிவிட்ட
படு கொலைகளுக் கெல்லாம் தமிழ்
இலக்கணமாக
விழா எடுக்க வேள்வியைக்க
பெயர் இடை உரி அசை
வினை தொகை எச்சம் என
இரண்டிற்கும் சேர இவற்றில்
வரும் பொருள் யார் உரைப்பார்
அடுக்கிளையில் வரும் கிளவி
அடி வயிறு எரி நெருப்பு
பகுதி விகுதி சாரியை
சந்தி விகாரமென சொல்பிரிய

www.padippakam.com

பகுபதம் பகாப்பதமென
வகுத்துப் பிரித்து இதற்கு மேல்
வரிந்து கொண்டால்
வருண்டா தமிழ் காக்க

வேற்பன

# மீண்டும் ஒரு முற்போக்குவாதி...

தமிழ்பேசும் மக்களால் முதல்முதல் தெரிவுசெய்யப்பட்ட இடதுசாரிப்பாராளுமன்ற உறுப்பினரான தோழர் கந்தையாவின் வெற்றிக்காக முழுமூச்சாக உழைத்தவரும்
தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நீண்டகாலமாகிய சாதிக் கொடுமைகளை எதிர்த்து முற்போக்கு சக்திகளால் நடாத்தப்பட்ட தீண்டாமை போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவரும்
வழக்கறிஞரும், இளைப்பாறிய பாடசாலை அதிபரும், வடமராட்சியிலுள்ள கல்விமான்களுள் ஒருவருமாகிய திரு. வல்லிபுரம் மகாலிங்கம் அண்மையில் அராஜகவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.
முற்போக்காளர்களை திட்டமிட்டு படுகொலை செய்துவரும் இவ் அராஜக செயலை வன்மையாக கண்டிக்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணுக்கு தெரிகிறதா?

சிறுகதை

செம்பிரியா

வாசு சாருஹாசனைக் கூட்டிக் கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கி நுழைந்த கிராமத்தின் காவடியாத்தம்மை நினைத்தான். கடந்த வருடம் தீபாவளிக்கு வந்து போனதற்குப் பிறகு இப்போது தான் ஊருக்கு திரும்பி வருகிறேன். வாசுவுக்கு மனம் படபடத்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் ஒரு வைராக்கியத் துடன் நடந்து கொண்டிருந் தான். என்ன எதிர்ப்பு வந்தா லும் சமாளிப்பது என்ற முடிவு டன் தான் சாருஹாசனைக் கூட் டிக் கொண்டு வந்திருந்தான்.

செருப்புச் சத்தம் கேட்டு முருகேசு வீட்டு நாய் குலைத்ததில் பயந்து போன சாருஹா வாசுவின் கையைப் பிடித்துக் கொண்டாள். சாரு ஹாவின் கைகள் நடுங்கிக் கொ ண்டிருப்பதில் இருந்து அவளின் மனநிலையைப் புரிந்து கொண்டான்.

என்ன சாரு நாய் குலைத்ததில் பயந்திட்டியா? இல்லீங்க. உங்க வீட்டுல என்ன நடக்கப் போகு தோ என்று தான் பயமா இரு க்கு.

நான் இருக்கும் போது நீ ஏன் பயப்படுகிறாய். மிஞ்சி மிஞ்சிப் போனால் வீட்ட விட்டுப் போகச் சொல்லுவாங்க. என்ன உயிரையா எடுக்கப் போறாங் கள்.

என்று சொல்லிக் கொண் டு வந்த வாசு கோவில் பக்கம் குறுகுறுப்பதையும் முருகேசுவின் மனைவி வெளியில் உள்ள பழைய பனி ஓலையை தையாமல் தொங்கி இருப்பும் பார்ப்பதை யும் கடைக்கண்ணால் பார் த்துக் கொண்டு தெரு முட் டும் போகும் முடுக்குகள் திரும்பினான். முடுக்குகளில் ஒன்றில் நின்ற புளிய மரமொன்றில் புளியம்பழம்

www.padippakam.com

அடைந்துக் கொண்டிருந்த சிறுவர்கள் வாசுவுடன் சாருஷா வட்ட வடிவமாக நின்று சாருஷாவை கண்ணுக்குள் ஏற்றிக் கொண்டது போல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே கடைசியில் தனது விவகாரத்தை வீட்டுக்கு எழுதியிருந்த படியால் பெரிய பூகம்பம் வெடிக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டு வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வளவுக்குள் இறங்கினான்.

முற்றத்தில் நின்றிருந்த வாசுவின் தங்கச்சி சோபனா வாசுவைக் கண்டதும்

அம்மா அண்ணா .....என்று பலமாகக் கத்தியவள் பக்கத்தில் சாருஷாவைக் கண்டதும் வாயைப் பிளந்த படியே வந்ததை மூடாமல் அடக்கிக் கொண்டு நீளப் பாவாடையை நடக்காதவாறு ஒற்றைக் கையால் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

வாசு சாருஷாவுடன் வீட்டுக்குள் நுழைந்து விறாந்தையிலிருந்த ஒரு பெஞ்சில் பிரயாணப் பைகளை வைத்து விட்டு கதிரையில் அமர்ந்து கொண்டு சாருஷாவை ஒரு கதிரையில் இருக்கும்படி சைகை காட்டினான்.

சிறிது நேரம் வீட்டுக்குள் மயான அமைதி நிலவியது. அம்மா கதவில்லாத சின்னறையின் நிலையில் தலையைச் சாய்ந்த படியே மகனையும் மருமகளையும் கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தாய்க்குப் பின்னால் நின்றிருந்த சோபனா தாயின் சாய்ந்திருந்த தலைக்கும் தோள்பட்டைக்கும் இடையில் உள்ள இடைவெளியில் அண்ணியை அங்குலமங்குலமாக அளந்து கொண்டிருந்தாள்.

செருமல் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். பழகிப் போன தகப்பனின் செருமல் சத்தம் கேட்டு வாசு தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

தம்பிப்பிள்ளை வாத்தியார் தோட்டத்திலிருந்து கொண்டு வந்த மண்வெட்டியை வெளியே வைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்தார்.

வாசுவையும் சாருஷாவையும் கண்டதும்

www.padippakam.com

கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. யாரைக் கேட்டு வீட்டுக்குள்ளை வந்தனி. நாங்கள் ஊரில் மானம் மரியாதையோட இருக்கிறது விருப்பமில்லையே. உனக்கு இங்கை பொம்பிளை கிடைக்காமல் போகுதுக்கு நீ என்ன தொண்டியோ விட்டுமோ .........

நிறுத்துங்கோ அப்பா. நீங்கள் ஒரு ஆசிரியர் இவ்வளவு கேவலமாய் பேசுவீயள் என்டு நான் நினைக்கயில்லை. எனது மனைவில் என்ன பிழை கண்டியள் அதைச் சொல்லுங்கோ. வாத்தியார் வாசுவை எரித்து விடுவது போல பார்த்தார்.

எங்கடை சாதி சனத்தில நான் அறிய இதுவரையில் சொந்தத்தை தாண்டாத சம்பந்தம் வைச்சது கிடையாது. அதுவும் மட்டக்களப்பில் இருந்து கூட்டி வந்திருக்கிறாய். எங்கடை சனம் மட்டுமில்லை இந்த ஊரில் அந்தன பேரும் எங்களை ஒதுக்கிவினம். இந்த வட்டாரத்தில் நான் கேள்விப்படாத ஒன்று நீ செய்திருக்கிறாய்.

தமிழ் பேசும் அனைவரும் தமிழர்கள். அவர்கள் வடக்கில் வாழ்ந்தால் என்ன கிழக்கில் வாழ்ந்தால் என்ன கொழும்பில் வாழ்ந்தால் என்ன மலையகத்தில் வாழ்ந்தால் என்ன. அனைவரும் சகோதரர்கள் என்று எனக்கு பாடம் சொல்லித் தந்தது நீங்கள் தானே.

அது வந்து ...... வாத்தியார் இழுத்தார்.

தமிழர் வாழும் பிரதேசங்கள் எல்லாம் படம் வரைந்து போராட்டத்திற்கு ஆதரவாகக் கொடி பிடிச்சு ஊர்வலம் போனதும் நீங்கள் தானே. அது ...... வாத்தியார் கையைப் பிசைந்தபடி முழித்தார்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட வேணுமென்டு ராஜீவ் காந்திக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில முன்னின்று கையெழுத்து வைத்ததும் நீங்கள் தானே......

வாத்தியார் மகன் தன்னை மடக்கிறான் என்டு தெரிந்து திகைத்தார். வாத்தியாரின் மகன் தப்பித்தவறி சோதனையில்



படிப்பகம்

www.padippakam.com

சித்தியடையாமல் போனால் அவமானமென நினைத்து மட்டக்களப்புக்கு அனுப்பி என்னிலோ தன் எழுத்து செய்து உங்கட சாதி சனத்தில் ஏன் இந்த வட்டாரத்தில் யாருமே செய்யாததை செய்ததும் நீங்கள் தானே......

வாசு ஆவேசம் வந்தவன் போல கத்தினான்.

சும்மா கத்தி அக்கம் பக்கத்தைக் கூப்பிடாதை. மட்டக்களப்பில் எந்தகிட்டிலயும் ஆரும் போயிருந்தால் பாவோட இருந்திப் போவினமாம். அப்படியான ஊரில் நீ பெண் எடுக்க வேணுமோ என்றாள் அம்மா.

வாசு அதிர்ந்து போனான். இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

அம்மா நீங்கள் தலைகீழ் விழுந்தாலும் யாரோ சூனியம் செய்து போட்டினம் என்டு யாரும் சொன்னால் அதுக்கு பார்வை பார்க்கிறனீங்கள். யாரோ வடக்கையும் கிழக்கையும் பிரிக்க கட்டி விட்ட கட்டுக்கதையை நம்பி இனத்துக் குவளியாய்



காலத்தை ஓட்டுறீயள்.

யாழ் அக்ராச்

சங்கம் வைத்திருந்து யாழ்ப்பாணத்தான் அச்சு இரட்டணையை விட்டை நீ சம்பந்தம் செய்ய உனக்கென்ன பித்தோ பிசகோ என்று கேட்டார் வாத்தியார்.

சங்கம் வாசுக்கு உங்கட பிரதேச வாதத்தை புரிந்து கொண்ட அரசியல் வாதிகள் தான் காரணம். உங்கட பிள்ளை படிக்க வேணும். உங்கட பிள்ளை வேலை செய்ய வேணும். அது போதும் மற்றவன் பிள்ளை எக்கேடு கெட்டால் என்ன என்ட உங்களைப் போன்றவர்களின்ற சுயநலப் புத்தியும் ஒரு காரணம்.

என்னடா விசர்க்கதை கதைக்கிறாய்.

நான் விசர்க்கதை கதைக்கயில்லை. உண்மையைத் தான் சொல்லுறன். யாழ்ப்பாணத்தில் வெள்ளைக்காரனுக்கு வால்பிடிச்சதால் பள்ளிக் கூடங்களும் படிப்பு வசதிகளும் கூட இங்க உங்கட பிள்ளையள் பத்துப்பேர் சோதனை எழுதினால் எல்லோரும் ஒரே மாதிரிப்புள்ளிகள் எடுப்பினம். அப்ப

படிப்பகம்

www.padippakam.com

சித்திரவதை செய்கிற கூடம். மேலி வசதி நிறைந்த கூடங்களில் உங்கட பிள்ளைகள் அனுப்பினால் இங்கை C எடுக்கிறவை அங்க D எடுப்பினம். வேலையும் அப்பிடித்தான். அப்ப அங்க உள்ள பிள்ளையள் படிக்கவுமேலாது வேலை செய்யவுமேலாது. நீங்கள் காரணமாயிருந்து கொண்டு மனச்சாட்சியை விட்டுக் கதைக்கிறது நியாயமில்லை அப்பா.

வாத்தியாருக்கு தன்னைக் கட்டுக்கட்டாயது பொறுக்கமுடியவில்லை. என்னடா சொல்லுறெய். நீ எனக்குப் படிப்பிக்கிற அளவுக்கு வளர்ந்திட்டியோ. வாசுவை இழுத்துப் போட்டு அடித்தார். வாசு அசையவில்லை.

அப்பா நீங்கள் அடித்தாலும் உண்மை உண்மை தான். உந்தப் போலி வாழ்க்கையிலிருந்து வெளியே வாருங்கள். தூய்மையான மனதுடன் மனிதநேயத்துடன் மனிதர்களை மதித்து பழகுங்கள். உங்களுக்கெல்லாம் எதற்குப் போராட்டம். ஊருக்குள்ள சாதிக் கொடுமைகள். அதிலிருந்து விடுபட்டு ஒன்றுபட முதலில் போராடுங்கள். வெளியே வந்தால் பேச்சிலே எல்லோரும் இணைய வேண்டும். நடைமுறையில் ஒருவரையொருவர் பிடித்துத் தின்னும் பிரதேச வாதத் தொடரங்கள் அதற்குப் போராடுங்கள். இவையெல்லாம் வந்திடும் வெற்றி காணாமல் தேசிய விடுதலை என்று சொல்லி உங்களை நீங்களே ஏமாற்றுவதும் அநியாயமாக உயிர்களைப் பலிகொடுப்பதும் தவிர வேறொன்றும் காணப் போவதில்லை. நீங்கள் உங்களைத் திருத்தாத வரைக்கும் நான் உங்களில் மதிக்க மாட்டேன்.

வாசு சாருஷாவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு விறுக்கென்டு வெளியேறினான்.

வாத்தியாரும் மனைவியும் கோபனும் வாசு போனதிசையைப் பார்த்தபடி அதிர்ந்து போய் நின்றார்கள்.

வாசுவும் சாருஷாவும் எங்கு போகிறார்கள்? எங்கு போக முடியும். எங்கும் சேறும் சகதியும் தான். இவர்கள் தேடும் பூமி இன்றைக்கு தெரிகிறதா?



படிப்பகம்

www.padippakam.com



# குறிஞ்சிக் குறைகள்

படி - கருப்பையா

மாத்தளைப் பகுதி மலையகத் தொழிலாளர்கள் கடுமையான நோய் ஏற்படும் போது பெருங் கஷ்டங்களை சந்திக்க நேரிடுகிறது. சாதாரண வியாதிகளுக்கு தோட்ட வைத்தியசாலைகளிலேயே மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். கடுமையான நோய் ஏற்படும் போது தோட்ட அதிகாரியின் கடிதத்துடன் மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு செல்கின்றனர். அங்கு பணிபுரியும் பெரும்பான்மை இன ஊழியர்கள் இவர்களை கவனிக்காது நெடு நேரம் காக்க வைத்து விட்டு அவமரிய மாக உரையாடுவார்களாம். இந் நோயாளிகள் ஏதாவது கேட்டால் தோட்ட அதிகாரியின் கடிதத்தை வாங்கி கிழித்தெறிந்து விட்டு கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசி அனுப்புகிறார்களாம். இத் தொழிலாளர்கள் இது பற்றி யாரிடம் முறையிடுவது என விழிக்கிறார்கள். இயற்கை அனர்த்தங்களினால் மண் சரிவு வெள்ளப் பெருக்கில் அகப்பட்டு இரத்தினபுரி கேகாலைப் பகுதி தோட்ட தொழிலாளர்கள் அகதிகளாக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் போது இரக்கமேயில்லாத சிலர் இவர்களின் உடமைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இக் கொடுமைகளிலிருந்து மலையக மக்கள் மீட்சி பெறுவது எப்போ?



படிப்பகம்

# "சீனாவும் சீர்திருத்தங்களும்"

இன்றைய உலகின் மாமனிதர் சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்ப்பசேவ் சோவியத் யூனியனில் அறிமுகப்படுத்திய என்ற சீர்திருத்த கொள்கைகள் சீனாவிலும் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரி சீனமாணவர்கள் கோரிக்கை விடுத்தனர் இதற்கு சீனத்தலைமை செவிசாய்க்காமல் போகவே மாணவர்கள் அமைதிவழிப் போராட்டங்களில் இறங்கினர். சீனாவின் அதிமுக்கியமான தியனென்மென் சதுக்கத்தில் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கூடி ஜனநாயகம் வேண்டி உண்ணாவிரதங்கள் நடத்தினர். இவ்வேளையில் சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்ப்பசேவ் சீனாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். 30 வருடங்களுக்கு மேல் பகை கொண்டிருந்த சோவியத், சீனாவுடனான உறவுகள் இவ்வேளை மீண்டும் சுமுகமடைந்ததனால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாகும். ஆசிய அபிவிருத்தி மாநாட்டுக்காகவே கொர்ப்பசேவ் வருகைதந்திருந்தார். இம்மாநாடு நடைபெறவிருந்த தியனென்மென் சதுக்கத்தின் முன்றலிலேயே மாணவர்கள் கூடியிருந்தனர். சீனத்தலைமை நிலைமையை சமாளிக்க பலமுறை வேண்டுகோள் விடுத்தும் மாணவர்கள் செவிசாய்க்கவில்லை. இறுதியாக மாநாடு நடைபெறும் இடத்தை மாற்ற வேண்டி ஏற்பட்டது. கொர்ப்பசேவ்வைப் போற்றும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் தாங்கியிருந்தனர். மாணவர்கள் கொர்ப்பச்சேவ்வை சந்திக்க சோவியத்தூதரகமூடாக வேண்டுகோள் விடுத்தனர். கொர்ப்பசேவ் சந்திக்க விரும்பவில்லை இதுபற்றி அவர் கருத்து தெரிவிக்கையில் நாட்டின் விவகாரங்களுக்கேற்ப

www.padippakam.com

ஜே ராம் சீர்திருத்தவாதிகளைக்
கொண்டுள்ளோம். ஒரு போராட்
டம் மேற்கொள்ளும் மா
ற்றவர்கள் அடிப்படையில்
வேறுபாடுகளில் புதைந்துள்ளன
தாராள கிடைத்தகாலங்களில்
பல்வேறு பிரச்சினைகள், இச்
சிக்கல்கள் தோற்றுவித்துள்ளன
என்று கூறினார். தொடர்ப்பவர்
வி சோவியத்யூனியனுக்குப்புறப்
பட்டதும் நடவடிக்கைகளில்
தோல்வி கண்ட சிறைத்துறைமை
சிந்தை இவ்விதத்து. நாம் உங்
கள் வேண்டுகோளைக் கட்டுமொ
சாய்க்கின்றோம் ஆனால் இன்
று நாம் உள்ள நெருக்கடிகளி
ல் இது சாத்தியம் இல்லை
மாணவர்கள் நாங்களுடன்
இத்துறைக்கு வேண்டுமென்று
வேண்டியது. மாணவர்கள்
தொடர்சாயக்கவில்லை உண்ணா
விரதப்போராட்டத்தினை மேற்
கொண்டனர். மாணவர்கள்
சுதந்திர யூனியன் என்னும்
அமைப்பை உருவாக்கியதை
அங்கீகரிக்க வேண்டுமென்றும்
அவ்வமைப்பின்படாக பேச்சு
வார்த்தைகள் . நடாத்த வே
ண்டுமென கோரிக்கை விடு
த்தனர். சிறைத்துறை மறுத்து
விட்டது. நாட்களாக்க
மாணவர்களின் உண்ணாவிரத

போராட்டத்தின் உச்சக்கட்
டமாக அமைந்தது. மயக்கம்
உற்ற மாணவர்கள் வைத்திய
சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்
டனர். புதிய மாணவர்கள் உ
ண்ணாவிரத போராட்டத்தைத்
தொடர்ந்தனர். வைத்தியசா
லையில் மாணவர்களை சென்
று பார்வையிட்ட சிறைத்துறை
இருவர் மாணவர் பொருதவரை
உண்ணாவிரதத்தைக் கைவிடு
மாறு வேண்டினார். மாணவர்
அதிகாரிகளிடம் சிறைச்சாலைச்
சீர்திருத்தங்கள் அனைத்தை
யும் மேற்கொள்ள வேண்
டியதன் அவசியத்தை அரசியல்
ரீதியாக விளக்கி வைத்தார்.
இச் சிக்கலான சிறைத்தொழில்
கட்டத்தில் தெளிவுபடுத்த
து உண்ணாவிரதத்திற்கு ஆ
தரவாக வட்டங்களைக்கான
மாணவர்கள் ஆர்ப்பாட்ட
ஊர்வலங்களை நடாத்தினர்.
இதற்கு ஆதரவாக பல்வேறு
வகைப்பட்ட தொழிலாளர்
களும், புத்திஜீவிகளும் கலந்து
கொண்டனர். ஜனநாயகம்
நிரூபிக்க ஒற்றுமை கோரும்
கின் ஊர்வலத்தில் மாண
வர்கள் கோஷித்தனர். நமது
வேண்டுகோளுக்கு செவி



படிப்பகம்

www.padippakam.com

சாய்த்த மாணவர்கள் மற்றத்துணர் என்ற காரணத்தால் ஆத்திரமடைந்த சீன தலைமை மிலேச்சத்தனமாக கொடூரமான முறையில் இராணுவத்தை கட்டவிழ்த்து விட்டு மாணவர்களின் நாகரிக போராட்டத்தை ஒடுக்கியழித்ததுடன் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கொலைசெய்யப்படும் படுகாயப்படுத்தப்பட்டுமுள்ளனர்

இன்று சீனத்தலைமையில் பிரச்சனைக்கு முன்னவராக விளங்கும் அதி உயர் தலைவர் டெங்சியாவோபிங் இன்றுமட்டும் பிரதிநிதிக்குரியவர் அல்ல. தோழர் மாவோசேதுங் தலைமையில் 1966—1976 ல் நடைபெற்ற மகத்தான பாட்டாளிவர்க்க கலாச்சாரப்புரட்சியானது கம்யூனிஸ் கட்சிக்குள் உள்ள கம்யூனிச விரோதிகளையும், முதலாளித்துவ பாதையாளர்களையும் களையெடுக்கப்பட்டது அப்போது இன்றைய அதிஉயர் தலைவர் டெங்சியாவோபிங்கும் ஜனாதிபதியாக இருந்த லியுசாவோசியும் தான் பிரதான



எதிரிகளாக தோழர் மாவோசேதுங்காலும் மக்களாலும் விமர்சிக்கப்பட்டனர் இவர்களுக்கு எதிரான மக்கள் அன்று கோஷங்களை எழுப்பிபோராடினர். இன்றும் ஜனநாயகத்திற்கு எதிராக அடக்குமுறையான கோஷம் எழுப்புகின்றனர்.

மாணவர்களின் ஜனநாயக கோரிக்கை நியாயமானது. இதற்கெதிராக சீன தலைமை மேற்கொண்டுள்ள கொடூர நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது. சீனத்தலைமையின் நடவடிக்கைகளினால் கம்யூனிஸத்திற்கே ஒரு இழுக்கு ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் போராட்டம் நியாயமான அடிப்படையில் இவர்களுக்கு பின்னால் குழப்பவாதிகள் உள்ளனரோ என எண்ணும்வகையில் போராட்டத்தை மேற்கொள்ளப்படவேண்டும், ஆயுதமற்ற பணத்தை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் மேலைத்தேசிய நாடுகள் இதற்குக் காரணம் தத்துவங்களை ஏற்படுத்துகின்றன. இம்மாணவர்கட்கு ஆதரவாக

www.padippakam.com

தமிழ்பேசும் மாணவர்கள்
மத்தியிலிருந்து "ஈரோஸ்" என்

ஆம் மாணவர்களுக்கான ஆதரவு
செய்தி அனுப்பியது குறிப்பிடத்
தக்கதாகும்.

# வாழ்த்துகிறோம்



டானியல் ஒட்டேகா

1956ல் ஆட்சிக்கு வந்த அனஸ்தாஸியோ சொமோசா டெ பாயிலே சர்வாதிகாரியாக, அமெரிக்கக் கைக்கூலியாக மாறியதனால் தேசிய காவற்படையின் துணைகொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவா மக்கள் மீது திணித்த கொடூரமான ஊழல் நிறைந்த சொமோசாவின் ஆட்சியை எதிர்த்து 1961ல் தோன்றிய சண்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (FSLN) என்னும் புரட்சிகர மக்கள் இயக்கம், நிக்கரகுவா தொழிலாளர்களை, விவசாயிகளை, மக்களை இணைத்து போராடியதன் விளைவாக புரட்சிகர நிக்கரகுவா மக்கள் அரசு தோன்றிய நாள்

1979 ஆடி 19



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் பேசும் மக்களும் பேச்சுவார்த்தைகளும்

நேசன்

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா
வாவின் பகிரங்க அழைப்பின்
பேரில் ஏற்பட்ட இணக்கங்
களுடனான அடிப்படையில் விடுதலை
புலிகளுக்கும் அரசபிரதிநிதி
-களுக்குமிடையில் நடைபெற்ற
முதல்கட்ட பேச்சுவார்த்தைகள்
முடிவடைந்துவிட்டது. முதல்கட்ட
-ப் பேச்சினில் இலாபம் யாருக்கு(?)
பேசினார்கள் என்பது புதிராகவே
யுள்ளது. அடுத்தகட்ட பேச்சு
வார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு
-த விடுதலைப்புலிகளின் அரசியல்
ஆலோசகர் அன்ரன் பாலசிங்
கம் மீண்டும் கொழும்புக்கு
சென்றுவிட்டார். இவ் இருபகுதி
யினருக்குமிடையிலான தொட
ர்ந்து நடைபெற்றுக் கொண்டு
இருக்கும் பேச்சுவார்த்தைகள்
இந்தியப்படைகளை வெளியேற்று
வது, மாகாணசபையை கலைப்பது
போன்ற விடயங்களை மட்டும்
நோக்கமாக கொண்டதா?
வடக்கு கிழக்கு பகுதிகளில்
இலங்கைஅரசு விரும்புகின்ற
மாதிரியான (அடக்குமுறை)-
-அமைதிப்பணிகளில் இலங்கை
ஆயுதப்படைகளை ஈடுபடுத்துவதா?
அல்லது இப்பேச்சுவார்த்தையும்
கடந்தகாலங்களைப் போல பேரின
வாத அரசினால் காலங்கடத்து
வதற்காக பயன்படுத்தப்படும்யுக்தி
களா? போன்ற சந்தேகங்கள்
தமிழ்பேசும் மக்களின் மனங்களி
ல் எழுகின்ற கேள்விகளாகவுள்
ளது. ஸ்ரீலங்கா பேரினவாதத்
தாபனத்தின் ஆயுதப்படையின
ரின் புதிய செய்கைகளை (!!)
லான தாக்குதல்களிலும், பேரின
இயக்கங்கள் இடையே உருவான
கருத்து முரண்பாடுகளே பாரதூர
முரண்பாடாக வெடித்து
அதை ஆயுதங்களூடாகத் தீர்
க்க முற்பட்டதன் விளைவாக
உருவாகிய அராஜகத்தின் தாக்
கத்திலும், அமைதிப்படையை
போன்ற வந்தவர்கள் திருகோண
மலை வெள்ளவத்தை கொழும்பு
புலிகள் மாதிரியான நடவடிக்கை
களிலும் இருந்து விடுகின்றனர்.
-யமுதியனை மீண்டும் உருவாக்
க வேண்டும் ... தமிழ்த்தேசியத்தின்


படிப்பகம்

www.padippakam.com

விளைவே மக்கள் இயக்கமாகும் உரிமைகளை [illegible] 32

[illegible]லில் சிறுபான்மை என்ற பார்த்து இருப்பதற்கு காரணமாகும். ஆனால் இப்பேச்சுவார்த்தை எமது தேசத்தில் உண்மையான சமாதானத்தின் உருவாக்குவதற்கான நடவடிக்கையாக அமையுமா? அல்லது எரிந்து கொண்டு இருக்கின்ற எமது பாரம்பரியத்தை மேலும் எண்ணெய் ஊற்றுவதாக அமையுமா?

இவ்விளைவின் இரு பெரும் பேரினவாத கட்சிகளான U.N.P, S.L.F.P ஆகியவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட (பண்டா-செல்வா டட்லி-செல்வா) ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டதாக கிழித்தெறியப்பட்டதுடன் அந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையில் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பது வரலாறு தந்த பாடங்களாகும். வேறு நாட்டை (இந்தியா) வைத்தே இவ்வளை அரசு செய்து கொண்ட பட்ட ஒப்பந்தத்தில் [illegible]ன. இந்த கொள்கைப்பட்ட 22

மாறும் இப்பேரினவாத அரசிடம் இருந்து விடுதலைப்புலிகள் உரிய அதிகாரங்களை பெற முடியுமென நினைத்தால் அது மணப்பால் குடித்த கதையாகதான் இருக்க முடியும்.

இவ்விளை அரசு விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை அவசரத்தில் ஆரம்பித்தது ஏன்? தென் இலங்கை மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் போராட்ட [illegible] நடவடிக்கைகளையும், அவர்கள் [illegible] தீவிரவாத பூச்சாண்டி காட்டி அரசாங்கத்தில் பாதிக அரசின் இருப்பினை நிச்சயமாக அதனை கைப்பற்றுவதற்கே. இவ்வளை அமைதி ஒப்பந்த [illegible] வசதிக்காலத்தினில் தமது பொருளாதார நெருக்கடிகளை தீர்த்துக் கொள்வதற்காகவும், ஐரோப்பிய நாடுகளின் பாரிஸ் மகாநாட்டினில் உதவிகளை பெற்றுக்கொள்ள இவ் உதவிகளை பெறுவதற்காக இப்பொழுது அரசும் கூட்டுத் திட்டத்தினில் பேச்சுவார்த்-

-லாத என்ற சொல்லைத் தமிழர்
கேட்பது வழக்கம். ஆகவே இவ்
உதவியை பெறுவதற்காக
அம் பேச்சுவார்த்தை ஒன்று
தேவைப்படுகின்றது. நாங்களும்
தீவிரவாத இடதுசாரிக்கொள்
கையாளர்கள் மக்களின்
பிரச்சனைகளில் அக்கறையுடை
யவர்கள் ஆகவே நாங்கள்
இப்போதைக்கு பேசுவோம்
என்பதாலும், இலங்கை-இந்தி
ய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள
ஒத்துக்கொள்ளப்பட்ட அந்த
அதிகாரப் பகிர்வுகளையும் வரையறை
வட-கிழக்கு மாகாணசபைக்கு
பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
என்ற இந்தியாவின் நிர்ப்பந்த
மும், தமிழ் பேசும் மக்களின்
பாரம்பரிய பிரதேசமாக வட
-கிழக்கு மாகாணங்கள் இருக்
கையால் இணைந்து இருக்கக்கூடு
மட்டுமன்றி வளையாக தேவைப்
தேவையில்லாததொன்று.
என்ற முஸ்லிம் காங்கிரஸ்
ஸின் கோஷங்கள் போன்
றவற்றை சிங்களவர்களுக்
கு போட்டுப் பார்த்து ஜனா
திபதி பிரேமதாசா தனக்குரிய
அனுமதி விரும்பியவாறு கட்ட
மாற்றி ஆகு முறையாக J.V.P
யையும் விடுதலைப் புலிகளையும்

பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.
விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்
த்தை நடத்திக்கொண்டிருக்
கிறேன் என்ற காரணத்தைக்
காணிவிடயம் சம்பந்தமான
அதிகாரங்களை மாகாணசபைக்கு
பகிர்ந்தளிக்காது இழுத்தடிப்பில்
திட்டமிட்ட குடியேற்றங்களை
மேற்கொள்ளவும் இருக்கின்றார்
தமிழ் பேசும் மக்களான முஸ்லிம்-
தமிழ் மக்கள் மத்தியில் விரோத
உணர்வுகளையும், மோதல்களையும்
உருவாக்குதல் போன்ற விடய
ங்களை U.N.P அரசு மிகவும்
சாதுரிய மான முறையில்
திட்டமிட்டு மேற்கொண்டுவரு
கின்றது. வடக்கு மாகாணத்தை
யும் கிழக்கு மாகாணத்தையும்
இணைக்கும் பகுதியான மண
லாற்று பிரதேசத்தில் வாழ்ந்து
வந்த 15,000 மேற்பட்ட
தமிழ் மக்களை அகற்றி
விரட்டியடித்துவிட்டு முழு இராணு-
-வ பாதுகாப்புடன் அப்பிரதேச
த்திற்கு வெலிஓயா என்று நா
மம் சூட்டி அநுராதபுரம் மா
-வட்டத்தினூடாக 5000 மேற்
பட்ட சிங்கள மக்களை
குடியேற்ற நடவடிக்கைகளும் செய்
யப்பட்டுள்ளது. இப்பிரதே
சத்தில் இப்பொழுது இந்திய
இராணுவத்தினராலேயே கூடுதலான

www.padippakam.com

சிங்களமக்கள் குடியேற்றப் பட்டு இருக்கிறார்கள். அப் பிரதேசத்தினை தனிமாவட் டமாகக் இலங்கை அரசு முனைந்து வருகின்றது. ஆனால் இந்தியபடைகளை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத் திற்காக பல குழப்பங்க ளாக திட்டமிட்ட அழிப் படையில் தமிழ்பேசும்மக் களையும் அவர்களுடைய பாரம்பரிய பிரதேசத்தினை யும் ஆக்கிரமித்தும் ஸ்ரீலங்கா பேரினவாத அரசாங்கமான் விடுதலைப்புலிகள் மேல் தாக்குதலை நடத்திகொண்டு இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும்.

தமிழர்களு க்கு இரண்டே தீர்வாக தமிழ் ஈழத்தைத் தவிர வேறு எந்த தீர் வும் தீர்வாக அமைய போவ தில்லை என்று உறுதியே இலங் கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தனர் விடுதலைப்புலிகள். ஆனால் விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைக்கு போக வேண்டியத ன் அவசியம் என்ன? ஜனாதி பதி பிரேமதாசாவின் அழைப்பை மதித்து விடுதலைப்புலிகள் 24 மணித்தியாலத்துக்குள் தாம் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விரும்புவதாக மறு அறிவித்தல் விட்டதன் மர்மம் என்ன? எமக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுன- -ம் பிழைக்க வேண்டும் என்ப தன் நோக்கமே இந்தியப்படை களை வெளியேற்ற வேண்டும் இந்தியாவின் முகத்தில் கரியூச வேண்டும் என்ற நோக்கத் துடனேயே கலந்து கொண்ட னர். யாருக்கு கரியூசுவதாக எண்ணி எமக்கு நாமே பூசிக் கொண்டதை தமிழ் பேசும் மக்களுக்கு எதிர் காலம்தான் நிரூபிக்கும். இந்தி யபடையினர் அமைதிப்படை யினராக நடந்து கொள்ள வில்லை அது 5000 தமிழர்களை கொலை செய்துவிட்ட தென்று விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசிடம் முறையிடுவது வேடி க்கையானதே. ஏனெனில் ஸ்ரீ- -லங்கா அரசு ஒருபோதும் அமைதிப்படையில்லை. 83ம் ஆண்டுக்கு பிற்பட்ட 4 வருடகாலத் தில் 15,000 மேற்பட்ட தமிழ் பேசும் மக்களை பலிகொண் டதையும் இராணுவமே த

www.padippakam.com

மக்கள் பரவிச்செறிவதற்கான்
பரவிக் வாழ்க்கை நடாத்த
வேண்டிய சூழ்நிலை ஏற்பட்
டதையும் விடுதலைப்புலிகளால
ந்த வாட்டாரர்கள் போல் தோ
ன்றுகிறது. விடுதலைப்புலிகளு
க்கும் இலங்கை அரசுக்கும்
இடையில் நடைபெற்றுகொண்
டு இருக்கும் பேச்சுவார்த்
தைகள் அமெரிக்க. பிரித்
தானிய ஏகாதிபத்தியங்களி
ன் பார்க்க இலங்கை பாரத
பலிபதன் ஓர் அங்கமாகவே
அமைந்துள்ளது.

ஏழு கடந்
தகால நிலைமைகளை போல்
இப் பேரினவாத முதலாளி
த்துவ அரசுத்தனை வைத்து
கொண்டும் எப்பத்துவங்க
ளோ அல்லது சுயாட்சியையோ
சிங்களர் தமிழ் பேசும் மக்
களுக்கு உரிமைகளை நிரந்
தர அமைதியின் பெற்றுதர
போவதில்லை. தமிழ் பேசும் மக்
களின் இன்றுள்ள ஆதாரத்த
நிலைமைகளை பார்த்தால் தமிழ்
பேசும் மக்கள் ஏற்பட்டதால்
இந்திய படைகள் அட்டூழியம்
செய்திருந்தாலும் இலங்கையு
த படையினரை வடக்கு
கிழக்கிலில் வெளியேற்றுவதை

விரும்பவில்லை. குறிப்பாக வெளி
மாகாணத்தில் இலங்கை
படைகள் திரும்பயால் ஈடு
படுவதை முழுமையாக தமிழ்
மக்கள் விரும்பவில்லை காரண
ம் இப் படைகளினைவ் ஏற்பட்
ட அப்பரான சம்பவங்கள் மக்
களின் மனதில் இருந்து
இன்னும் மறைந்துவிடவில்லை
-தவே இன்று நேரடி இலங்கை
இந்திய ஒப்பந்தத்தை ஏற்றின்
ற, ஆதரிக்கின்ற, எவரையும்
தன் நிலைப்பாட்டைகொண்டுள்
ள தமிழ் பேசும் மக்களிடையே
யுள்ள அனைத்து அரசியல் இயக்க
ங்களும், கட்சிகளும் ஓர் ஒ
ற்றுமைக்கு வரவேண்டும். ஓர் பொது
முடிவுக்கு வர வேண்டும் அதன்மூல
ம் மக்களின் இனவாயக உரிமை
பாதுகாக்கபட வேண்டும் அதுவே
தமிழ் பேசும் மக்களுக்கு சரியான
பாதையை தேர்ப்படுத்தும்
இதனையுணர்ந்து கொள்ள மறுப்
பவர்களுக்கு குறிப்பிட்ட ஓர்
இடைக்கியத்தினால் அழுதம்
போராடிய இயக்கங்களும் அவ்வியம
ற்பட்ட பிளவுகளினை ஜனநாயக
ரீதியினில் தீர்த்து கொள்ளாமை
மையினால் அது இடைக்கிய
தின் பால் வெற்றியடைக்கிடு
த்தும் அதைச்சரியாக நடைமுறை


படிப்பகம்

www.padippakam.com

றைப்படுத்தமுடியாது ஆசி யிலும் புரட்சிகர அரசுகள் பல உள்ளன. நிகரகுவா வின் சண்டினிஸ்டா அரசு எதியோப்பிய புரட்சிகர அரசு என்பன இதற்கு நல்ல உதா ரணங்களாகும். இந்திய வானது தனது பிராந்திய நலன்களுக்காக முக்கிய மாக இலங்கையில் எடுத்து கொள்கின்றது என்பதை யாருமே மறுக்கமுடியாது. ஆனால் இந்தியாவுக்கு இச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்ததில் இலங்கை அரசா ஙம் [illegible] இயக்கங்களுக்கும் பெரும்பான்மை பங்கு பங்கு உண்டு. இதை யாரும் இல்லை யென்று மறுத்திடவும் முடியாது. இந்து சமுத்திரப்பிரா ந்தியத்தினை அமைதியற்ற பி ராந்தியமாக உருவாக்க வேண் டுமென்பதில் அக்கறையுள் ள சக்திகளை இயக்கங்கள் உள் வாங்கியதும் ஒரு காரணமா கும். இந்தியா தொடர்பாக தமது ராஜதந்திர, தந்திரோபாய யங்களை உருவாக்கிக்கொள் ள முடியாமல் போனது இயக் கங்களுக்குள் அரசியல் வறு மை உண்டு என்பதை தெளி

வகை காட்டுகின்றது. இலங்கை இந்திய அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு பதி லாக போராடும் சக்தி கள் அனைவரும் முதலில் ஒரு மைப்பட்டு வர வேண்டும், இலங்கை அரசின் கொள்கை நோக்கத்தினை அறிந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்க ளின் உரிமைகளுக்காக ஓர் மக்கள் போராட்டத்தினை உரு வாக்க வேண்டும். அத்துடன் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ண ய உரிமையை அங்கீகரிக்கின் ற தென் இலங்கை ஜனநாயக முற்போக்கு, இடதுசாரி சக்திகளுடன் உறவை வலுப் படுத்துவதன் மூலம் தென் இலங் கையில் எமது உரிமைகளு க்காக ஜனநாயக போரா ட்டத்தை உருவாக்க முடியும். இதே வேளை போராட்டசக்தி கள் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக வடக்கு கிழக்கிலே ஓர் உறுதியான மக்கள் போராட்டத்தை உரு வாக்கமுடியும். இதைவிடுத்து வி டுதலைப்புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி கொண் டு இருப்பதன் மூலம் எந்த உரிமை களையும் பெறமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியச் சந்திப்பு

மனிதத் தேவைகளை அறிந்து அவற்றிற்கான அங்கங்களை உருவாக்குவது அறிவியலாளர் கடமை. இது மனித சமூக வளர்ச்சியின் பரிணாமத்தில் வரலாற்று ரீதியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இந்த உண்மைகளிலிருந்து நாங்கள் எங்களையோ அன்றி எங்கள் சமூகத்தையோ விலக்கி விடுவித்துக் கொள்ளலாம் என்பது அறிவீனம். அதற்கின் போக்குடன் ஒத்துப் போவது அதைத் தகர்ந்த இடத்தில் இருந்து தேக்கமொக்கி ஆக்கம் பெறுவதற்காகவேயாகும். கடந்த யுன் 10ம் நாள் ஜேர்மனியில் வாழும் தமிழ் அகதிகளின் மத்தியில் வெளியாகும் நமதுகுரல், தேனீ, புதுமை, தூண்டில், வெகுஜனம், சிந்தனை என்பவற்றின் ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், வாசகர்களும், விமர்சகர்களும், கலைஞர்களுடனும் தமிழ் தொண்டர்கள், நாலோர் பல்கலை மாணவர்கள் இளைஞர்கள் கல்விமான்கள் எனப்பலரும் ஸ்டுட்காட் நகரில் நான்காவது முறையாகச் சந்தித்தார்கள்.

இவர்களின் முதல் மூன்று சந்திப்புகளும் முறையே ஹேர்ண, டோட்மூண்ட், நொயில் ஆகிய நகரங்களில் நடந்தன. நொயில் நகரச் சந்திப்பில் மரபுவழி இலக்கியம், முற்போக்கு இலக்கியம் என ஆக்கதாரர்களும் சஞ்சிகைகளும் இனம் காணப்பட்டன. அதன் நான்காவது சந்திப்பு சமூக மாற்றத்தில் எழுத்தாளர் என்ற விமர்சனத்தின் நீரோட்டத்துடன் இழுபட்டுக் கொண்டு சென்றது.

பெண் விடுதலை பற்றி இம்முறையும் விமர்சிக்கப்பட்டது. பெண்களை அடிமை

www.padippakam.com

ப்பாகி நிலங்களின் அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறிய வேண்டும். பெண்கள் அமைப்பாகும் போது வர்க்க நிலை சார்ந்த பெண்களுடை அல்லது பூர்ஷ்வா பெண்களுடை என்ற விதமும் எதுவும் இல்லை. என்ன எப்படி இருந்தாலும் தமிழ் சமூகத்தின் எல்லாப் பெண்களுமே ஒரே நிலையிற்றான் உள்ளனர். இது மறுக்கப்பட முடியாத உண்மை. இப் பெண் விடுதலை பற்றிய தெளிவின்மை முதலாவது சந்திப்பிலிருந்து இன்று வரை நீண்டு கொண்டே வருவது கவலைக்குரியது.

பெண் என்பவள் மனித இனத்தின் பிரிக்கமுடியாத அங்கம். தமிழ் சமூகத்தில் இவள் அடிமையா? அடிமைப் படுத்தப்பட்டவளா? அப்படியானால் எப்போது? யாரால்? இக் கேள்விகளுக்கு விடை காண முயல்கையில் அடிமைத்தனத்தின் ஒவ்வொரு அலகுகளும் ஆராயப்பட வேண்டியதன் அவசியம் உணரப்படும். எமது சமூக அமைப்பிலிருக்கும் மனிதாபிமானமற்ற மதவழிபாடுகள், மரபுகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் கல்யாண சடங்குகள், செய்தொழிலின் அடிப்படையில் செய்து வைக்கப்பட்ட சாதி முறைகள் என்பன தான் இவ்வடிமைத்தனத்தின் நிலைக்களங்களாக நின்று நடாத்திருக்கும் சிறைப்பெட்டிகள். இவைகள் உடைக்கப்பட வேண்டும். எப்படி? காலத்தின் மாற்றங்களுக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் வாழ்க்கையின் செயல் முறைகள் மாற்றப்பட வேண்டிய அவசியம் இருப்பதாலும், உலகில் வாழும் மற்றைய மனித சமூகங்களோடு ஒப்பு நோக்குவதால் தெரியும் இடைவெளிகள் அவதானிப்பதாலும், கணிக்கப்படும் இப்பின்னடைவு ஒற்றுமையான ஆண், பெண் பேதமற்ற உழைக்கும் மக்களின் ஒருங்கிணைப்பின் மூலம் சமூக மட்டத்தின் சகல தரப்பினரும் (வெகுஜனங்களும்) பங்கு கொள்ளும் ஒரு புரட்சியின் மூலம் வென்றெடுக்கப்பட வேண்டும்.

சந்திப்பில் கலந்து கொண்டோர் இலக்கியப்



படிப்பகம்

www.padippakam.com

படைப்பாளிகளிடம் தமது கருத்துக்களை வேண்டுகோள்களாக விடுத்தார்கள். எமது இன்றைய போராட்டம் சமுதாயப்புரட்சியுடன் இணைந்த அரசியல் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் புரட்சியாக பரிணமிக்கும் போது இங்கு வாழும் எமது மக்களின் யதார்த்தம் எந்த வகையிலும் அந்தப்புரட்சிக்கு உந்து சக்தியாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் அகப்புறக் காரணிகள் அதற்கு அங்கீகாரம் அளியா. ஆனால் மாறுக இவர்கள் ஓர் எதிர்புரட்சிச் சக்திக்கு துணை போகாமலும் அதன் தாக்கத்தினால் உள்வாங்கப்படாமலும் பார்த்துக்கொள்ளுதல் புரட்சியை விரும்பும் ஒவ்வொரு முற்போக்கு இலக்கிய வாதிகளினதும் கடனாகும்.

இன்று நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை தன்மைகளும் பூர்ஷ்வாத் தன்மைகளே என்று திரு. செல்வன் கூறினார். ஆனால் இந்தப்புரட்சியை யார் முன்னெடுப்பார்கள். இதற்கான தயார் நிலைகள் உண்டா என்பன வெளிக் கொணரப் படவில்லை. இந்நிலையில் இன்று மக்களுக்கு சனநாயகம் மறுக்கப்பட்டு கொலைக்கலாச்சாரம் அரசோச்சிக் கொண்டிருக்கும் போது மக்களுக்கு நன்மை செய்பவர்களை எப்படி அடையாளம் காண்பது? இதற்கு விடை போன்று 1913 ஏப்பிரலில் பிராவ்டாவில் லெனின் எழுதியது சான்று பகர்கிறது. "ஆம் உண்மை தான்.... குறிப்பிட்ட கருத்துக்களை நேரடியாக முன்வைத்து அரசியலில் வாதாடுவது யார் என்பது அவ்வளவு முக்கியமானதல்ல. இந்தக் கருத்துகள் ஆலோசனைகள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலமாக ஆதாயம் அடையப் போவது யார் என்பதுதான் முக்கியமானதாகும்". [yes indeed In politics it is not so important who directly advocates parti-cular views, What is im-portant is who stands to gain form the views, proposals measures.]

கல்வி முறை மறுசீரமைக்கப்படவேண்டும். நம் தேசத்தில் நடைமுறையிலிருக்கும் கல்வித் திட்டமே நமது சமூகத்தின் உள்-முரண்



படிப்பகம்

www.padippakam.com

பாடுகள் அறியாது நிலைத்து நிற்பதற்குக் காரணம் சமூக விஞ்ஞான நோக்கில் எதிர்கால ஏற்றம் வேண்டிய புதிய கல்வித் திட்டம் தீட்டப்படு அவையே நம் சிறார்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என திரு. சிதிரங்கன் குறிப்பிட்டார். அத்துடன் இவ் இலக்கியச் சந்திப்புகள் வெறுமனே சந்தித்து பேசும் சந்திப்பாக இல்லாது செயற்திட்டங்களைத் தீட்டி அவற்றிற்கு உயிர் கொடுக்கக் கூடிய அமைப்பாக மாற்றுமாறு தேவையை வேண்டினார்.

சமூக மாற்றத்தில் எழுத்தாளரின் பங்கு என்ற இரு கட்டுரைகளை திரு. பார்த்திபன், திரு. ப. குமாரசாமி என்போர் எழுதியிருந்தனர். இக்கட்டுரைகள் விமர்சிக்கப்பட்டன. "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினால்" என்ற தமிழ் இலக்கண விதி எடுத்துக் கூறப்பட்டது. சமூக மாற்றம் அடிமட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் இடம் பெற்றது. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை மாற்றம் தேவை என்பது. ஆனால் அது எப்படியான மாற்றம். மாற்றம் என்பதை வளர்ச்சி என்றும் சொல்லலாம். இந்த மாற்றம் படிப்படியான மாற்றமா? (EV loutional change) புரட்சிகர மாற்றமா (Revolutional change) இதில் எந்த மாற்றத்திற்கு எப்படியான பங்கு என்பது பற்றி எவராலும் எதுவும் நேரடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

திரு. அ. பார்த்திபனின் கட்டுரையில்:-

சரியான வழியில் உண்மையான விடையைத் தேடப் போராடும் போராளியின் கையிலும் A.K.47 இருக்கிறது. விடையைத் தேடித் தமது நலன்மட்டுமே கருத்தில் கொண்டிருக்கும் கொலைஞரின் கையிலும் A.K. 47 இருக்கிறது. ஆயினும் இருவரின் நோக்கங்களும் செயற்பாடுகளும் குறிபார்த்தலும் வித்தியாசமானவை. இதே போல் எல்லா எழுத்தாளர்களும் பேனை வைத்திருந்தாலும் அவரவர் நோக்கம் கொள்கை செயற்



படிப்பகம்

www.padippakam.com

பாடுகளுக் கேற்ப அவரவரது கருத்துக்களும் வேறுபடுகின்றன என குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆனால் சமூக மாற்றம் எப்படியான மாற்றமாக வேண்டுமென்பதை இதற்கு எழுத்தாளர் பங்கு என்ன என்பதை கட்டுரையாளர் குறிப்பிடவில்லை.

திரு. ப. குமாரசாமியின் கட்டுரையில் :-

ஆயுதம் தாங்கியவர்களுக்கே ஆங்கிலம் தெரிந்தவர்கள் தான் பேச்சாளர்களாக இருக்க முடியும் என்ற நம்நாட்டு சூழலில் பேறு பிழைப்பவர்களும் தங்களுக்காக வேறு மொழி பெயர்ப்பாளர்களை கூப்பிடக்கூடாது எனக் குறிப்பிட்டு நமது சமூகத்தின் பரிதாபநிலையை படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அமைப்பாகிய மக்கள் சக்தியினூடாகத்தான் சமுதாய மாற்றம் சாத்தியமாகும் என தெளிவுபடுத்தப்பட்ட அதே வேளையில் பிரான்சியப் புரட்சியின் எழுத்தாளர் ரூஸோ இத்தாலிய ஒற்றுமைக்கு மஸினி, ரூசியப் புரட்சியின் முன்னோடி எழுத்தாளர்களான டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்க்கி போன்ற எழுத்தாளர்கள் எப்படி தமது சமூக மாற்றத்திற்கு, முன்னேற்றத்திற்கு பங்காற்றினார்கள் என்பதை கட்டுரையில் சேர்த்திருப்பின் கட்டுரை சிறப்புப் பெற்றிருக்கும்.

ஆண்கள் விரும்பின் என்ற விமர்சனம் இடம் பெற்றது. கதாபாத்திரங்களின் யதார்த்தங்கள் பல கோணங்களிலும் விமர்சிக்கப்பட்டன. கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்த கடைசியில் பார்த்திபனின் படைப்புக்களில் எதிர்காலத்தில் இக்குறைகள் களையப்பட வேண்டுமென வேண்டப்பட்டார். புதுமை சஞ்சிகையில் வெளிவந்த கேள்வி பதில் விமர்சனத்துக்குள்ளானது. இதில் நகைச் சுவை என்னவெனில் அதுவும் ஒரு விமர்சனமாக இருந்தது. வெகுஜனம் சஞ்சிகையில் ஆக்கத்தில் விமர்சனம் செய்யதாக கடலோடி யொருவரால் கூறப்பட்டு அதன் பக்கமும் நியாயங்களும் கேட்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

போது அவருக்கே தெரியாத
தால் கைவிடப்பட்டது. முதல்
மூன்று சந்திப்புக்களையும் விட
நான்காவது சந்திப்பு சிறப்பு
ற அமைந்ததாக தெலுஜனம்
சார்பில் மதிப்புரை கூறப்ப
ட்டது. அடுத்த இலக்கியச்
சந்திப்பிற்கான அமைப்புக்
குழு தெரிவு செய்யப்பட்டு
பிராங்பேட் நகரில் சந்திப்
பதென அறிவிக்கவும் பட்ட
து. இறுதியாக அமைப்புக்
குழுவால் தீர்மானிக்கப்பட்ட
படி பரிசுகள் கொடுக்கும்
நிகழ்ச்சி நடைபெற்றது. முத
லாவதாக கிடைத்த பரிசு தான்
டியின் அங்கத்தவருக்கு கிடை
த்தது. அவர்வராமையால் அப்
பரிசை அவர் சார்பில் கூடவா
டி பெற்றார். பார்த்திபனுக்கு பரி
சுகள் கிடைக்கப் பெற்றபோ
து அவர் அதைப் பெறாமல்
து பரிசு கோடாக்கிவிட்டதுடன்
தங்கள் உள்முரண்பாட்டையும்
சந்திப்பாளருக்கும் பரிசு அளிப்
பவருக்கும் வெளிக்காட்டிவிட்
டார். இவைதவிர எல்லாம் இனி
து நடந்தது. செப்டெம்பர்மா
தம் திரும்பவும் சந்திப்போம்.

பரந்தன் இரசாயனத் தொ
ழிற்சாலையை மூடி விடும்
முயற்சிகள் மேற் கொள்ள
ப்படுகின்றன. இதற்குப் பதி
லாக தெற்கில் ஒரு இரசா
யனத் தொழிற்சாலையை
அமைக்கப் போவதாக செய்
திகள் தெரிவிக்கின்றன.
இதனால் 500 தொழிலா
ளர்கள் தொழில் வாய்
ப்பை இழக்கவிருக்கின்
றனர். கனி வள பொரு
ளாதார உற்பத்திகளை
திட்ட மிட்டு ஆளும்
அரசுகள் வடக்கு கிழக்
-கில் மறுத்து வந்ததனா
லேயே வேலை வாய்ப்பை
இழந்த இளைஞர்கள் போரா
ட வந்தனர். இப்போது
இருக்கும் ஒரு சில கனி
வள தொழிற்சாலைகள்
பொருளாதார வளங்களை
மூடி விடுவதானது இனப்
பிரச்சினையை மேலும் சிக்
-கலாக்கும். 1983ம் ஆண்
டு முதல் இத் தொழிற்ச
ாலை இயங்காமலிருப்ப
தால் இயந்திரங்கள் பழு
தடைந்து வருவது இங்கு
குறிப்பிடத்தக்கதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணுக்கு வேலியா?

கவிதை

திருலோக-சந்தர்

பொருள் கொண்டு தாரம் ஆனதினால்
அவளும் பொருளாதாரம் தானே
மஞ்சள் கொண்டு செல்வதினால் தான்
அவள் மனைவியாகின்றாள்
தங்கம் போடுவதினால் தான் அவள்
தாரம் ஆகின்றாள்.
தாலி கொடுத்ததனால் தானே கணவன்
என்பவன் சொத்துக்காரன் ஆகின்றவன்
அவள் அழகோடு பிறந்ததனால்
அவனில் சந்தேகம் பிறந்தது
பல மனிதர்களை நம்பாததனால்
நாட்டுக்கு எல்லை வேலி
சில மனிதர்களை நம்பாததனால் தான்
வீட்டுக்கு முள்ளு வேலி
ஒரு மனிதனை நம்பாததனால் தான்
பெண்ணுக்கு தாலி வேலி
முற்றத்தில் கோலங்கள் போட்டாள் ஆனால்
அவளுக்கு போடப்பட்ட கோடுகளை
தாண்ட முடியாது முடங்கி வாழ்ந்தாள்
கோடுகளை தாண்ட கோரிக்கை வைத்தாள்
விண்ணப்பம் விவாகரத்து என்று வந்தது
அதனால் அவள் கோடுகளையும் தாண்டி
வேலிக்கு வெளியில் வந்தாள்
கழுத்தில் கட்டிய தாலியும்
முள் வேலி அறுக்கப்பட்டது
அது என்ன பெண்ணுக்கு
மட்டும் வேலியா?

பி. திருலோகசங்கர்


படிப்பகம்

www.padippakam.com

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல் - ஆறு

சங்கரப்பிள்ளையர் பரபரப்பாகக் காணப்பட்டார். அது ஒரு பக்கம் மகிழ்ச்சியான பரபரப்பு மறு பக்கம் கவலையான பரபரப்பு. கடைக்கு முன்னுள்ள ஆறடி முற்றத்தை சுற்றி ஒரு வேலி போட்டு அதற்குள்ள படலைக்கு வெளியே தலையை நீட்டி விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வளவுக்கும் காரணம் கடைக்கு அடுத்த வளவுக்குள் இந்திய இராணுவம் கடந்த ஒரு வாரமாக முகாம் போட்டிருந்தது தான். இன்று காலையில் அடுத்த சந்தியில் இந்திய இராணுவம் போய்க் கொண்டிருக்கும் போது யாரோ கிரனேட் எறிந்து போட்டு ஓடி விட்டார்களாம்; அதனால் போவோர் வருவோரை எல்லாம் விசாரணை என்னும் பேரில் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். சங்கரப்பிள்ளையர் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் சொல்வது கேட்பது எல்லாமே அவர் காதுக்கு கேட்டாலும் எதுவுமே விளங்கவில்லை.

சங்கரப்பிள்ளையரின் பக்கத்து வீட்டு கிழவன் (60 வயதிருக்கும்) சந்தைக்கு போய்க் கொண்டிருந்தவரை இராணுவம் விசாரணை செய்கிறது. ஆப் கிதர்சே ஆயா

ஒரு இராணுவ வீரன் கேட்கிறான் பொக்கு வாயால் தமிழே சரியாகப் பேச முடியாத



படிப்பகம்

கிழவன் எதுவுமே புரியா
மல் திரு திரு வென்று
விழிக்கிறான்.

பக்கத்தில் நின்ற
இன்னொரு கிராமவாசி
ஏன் அதை தனக்கு
தெரிந்த தமிழையும் த
னது மலையாளத்தையும்
கலந்து மொழி பெயர்
க்கிறான்.

நீங்கள் எவ்விடத்
தேயிருந்து வருகின்னது
கிழவனுக்குச் சற்றுப்
புரிந்தது.

நான் வீட்டிலியிரு
ந்து வாறேன் ஐயா.
அப்பி நீதா யாரங்கே
இப்போ எவ்விடம் போகி
ன்னு.

அந்தக்குப் போகி
ன்றேன் ஐயா.
ஏக் கண்டாக்கா வைபோ
இதர்சே எக் லேக்கா
சேயா அப் தேக் தாஜே.

ஒரு மணிக்கு முன்
னர் இவ்விட ஒரு புள்ளி
போயது நீங்கள் கண்
டோ. நான் அந்தப் புள்
ளியையும் காண இல்லி
ஐயா.

உங்கோ தேக்தா நீ
யே என்று மலையாளி
இந்திக்காரனுக்கு சொல்ல

அலோ அலோ என்று
சொல்லி கிழவனை போக
விட்டார்கள்.

இளவட்டங்கள் நா
லைந்து பேரை மெழுங்காலி
ல் நிறுத்தியிருந்தார்கள்.
சங்கரப் பிள்ளையரின் கடை
யைத் தாண்டி ஆண்க
ளும் பெண்களுமாக நின்
றிருந்தார்கள்.

இந்தச் சீதுவார்
வந்த பெரிய தொல்லை
யாய் போச்சு என்று
ஒருவர் அங்கலாய்ப்பது
பிள்ளையரின் காதில்
கேட்டது.

என்ன பிள்ளையார் விடு
ப்புப்பார்க்கிறீர் போல
கிடக்கு உமக்கு நல்ல
பொழுது போகுதே நான்
காணும் என்றவாறு வா
த்தியார் கடைக்குள்
நுழைந்தார்.

பிள்ளையார் முகத்தில்
கவலை படர்ந்தவராக
ம். தொட்டுக் கொண்டு

www.padippakam.com

பேசிய கதிரையின் அமர்ந்தார். என்ன பிள்ளையார் கவலையாய் இருக்கிறீர் என்ன விசயம்?

ரெண்டு கிழமையா வாரதியார் மந்தனத்துக்கு இரண்டு பக்கமும் அடி என்கிற மாதிரி நான் படும் பாடு பெரும் பாடாக இருக்கு.

ஏன் என்ன நடந்தது? ஆமிக்காரன் வந்த கடையிலை அடிக்கடி சாமான் வாங்குகினம் இப்ப கொஞ்ச நாளாய் வியாபாரம் பரவாயில்லை ஆனால் --- என்று இழுத்தார்.

ஆனால் என்ன பிள்ளையார்?

நேற்று இரவு இரண்டு பேர் துவக்கோடை வீட்டிற்கு வந்து உனக்கும் இந்தியன் ஆமிக்கும் தொடர்பிருக்கு நீ கடை பூட்ட வேண்டும் இல்லாட்டி மண்டைக்கு விழும் என்று சொல்லி போட்டுப் போகினம். நாலு காசு சம்பாதிக்கலாம் என்டால் விடமாட்டினம் போல கிடக்கு.

பார்த்தீரே பிள்ளையார் உம்மடைய புத்தியைக் காட்டிப் போட்டீர் மற்றவைக்கு நடக்கிறதுகளை சரியென்டு வாதாடினீர். போராட்டம் என்டீர் இப்ப உமக்கு வியாபாரம் படுக்குது என்ட உடனை கட்சி மாறி விட்டீர் இப்ப நீர் தொடர்ந்து இராணுவத்திற்கு சாமான் கொடுத்தால் நீர் துரோகி எண்டு கொக்காமல் கடை பூட்டினால் உம்மை இராணுவம் சந்தேகப்படும் இப்ப என்ன செய்யப் போறீர் தனக்கு தனக்கு என்டால் சுளகு படக்கு படக்கு என்குதாம் இப்ப விளங்கிக் கொள்ளும் துரோகிகள் எப்படி உருவாகிறார்கள் என்டு.

பிள்ளையார் இருதலைக் கொள்ளி எறும்பாய் நெளிந்துக் கொண்



படிப்பகம்

www.padippakam.com

படிக்கிறார் இருந்தாலும் தன்னை திருப்திப் படுத்த கதையை வேறு பக்கம் திருப்பினார்.

என்ன வாத்தியார் இந்தியன் ஆமி யூனிக்ளெல்லாம் வெளியேறப் போகுதாம் உண்மையோ?

வாத்தியார் புன்சிரிப்பொன்றை உதிர்த்தார்.

என்ன வாத்தியார் உண்மையோ?

என் கடையில வியாபாரம் படுத்திடும் என்டு பாக்கிறீரோ?

உங்களுக்கு என்ன தெரியும் பகிடி சொல்லுங்கோ வாத்தியார் என்ன மாதிரி?

இது வந்து பிள்ளையள் ஒரு பெரிய பிரச்சினை இதிலை நான் கருத்துச் சொன்னால் ஒரு பக்கம் நின்டு கதைக்கிறான் என்டு சொல்லுவீர். ஆனால் வியாபாரத்தை கதைத்தால் ஜீரணிக்க முடியாத உங்களுக்கு அது அப்படித்தான் படும் இருந்தாலும் சொல்லுறன் என்னை பொறுத்த வரைக்கும் இந்திய இராணுவம் வெளியேற வேணும் இது தமிழற்றை பிரச்சனை மட்டுமில்லை இலங்கையின்றை கௌரவப் பிரச்சனையும் கூட ஆனால் ஆமி ஏன் வந்தது என்டு யோசிச்சு பாரும் இயக்கங்கள் ஒற்றுமை இழந்ததால இலங்கை இராணுவம் லிபரேசன் ஒப்பரேசன் நடத்திச்சிது, தமிழரைக் காப்பாற்றுகிறோம் என்டு ஆமி நுழைஞ்சது. யாரையும் கேட்காமல் ஒப்பந்தமும் வந்தது எங்கடை இயக்கங்கள் விட்ட பிழைகள் நடத்தின அராஜக தாபகர்கள் எல்லாம் தான் ஆமி வர வழிவகுத்தது. வந்த ஆமி ஒப்பந்தம் நிறைவேறினால் போகுமெண்டு சொல்லிச்சினம் ஒப்பந்தத்தை நிறைவேற்ற அரசாங்கம் விரும்பாட்டி


படிப்பகம்

www.padippakam.com

லும் எங்கடை பக்கத்தி
லை நாங்கள் என்ன
செய்திருக்கிறம் எண்டு
யோசிச்சுப் பாரும். இந்த
ஒப்பந்தம் எங்கடை பிரச
சினைக்கு தீர்வு இல்லைத்
தான் எண்டாலும் அதி
லை உள்ளதுகளை தானும்
எடுக்கிறதுக்கு நாங்கள்
ஒண்டு பட்டு ஏதாவது
செய்திருக்கிறமா? வண்
டியிலை பூட்டின மாடுகள்
இரண்டு பக்கம் இழுத்தா
வண்டில் எப்பிடிப் போ
கும்?

குழவிக் கூட்டுக்கு
கல்லெறியிறதும் ஆமி
யோடை சொறியிறதும்
ஒண்டுதான். கல்லெறி
யிறவையை எறியுங்
கோ எறியுங்கோ எண்டு
உசார்படுத்திப் போட்டு
பிறகு ஐயோ குழவி
கொத்துது குழவி கொத்துது
எண்டு கத்துறதாலை என்
ன பிரயோசனம்?

இவ்வளவும் பட்
டாப் பிறகும் திருந்
திற பாட்டை காண

யில்லை எனக்கு மூக்குப்
போனாலும் பரவாயில்லை
எதிரிக்கு சகுனப் பிழை
வாற மாதிரி நடக்கக்
கூடாது. இந்தியன்
ஆமி போனால் இஞ்சை
ஆர் வருவினம் எண்டு
யோசிச்சுப் பாரும் ஒப்
பந்தமும் இன்றி வெறுமன்
பழைய குருடி கதவைத்
திறவடி எண்ட மாதிரி
வாற நிலை ஏற்பட்டா
ல் என்ன நடக்கும்.
எண்டு யோசிச்சு பாரும்.
கிடைச்ச சந்தர்ப்பத்தை
சரியாகப் பயன் படுத்த
வேணும் இல்லை
யெண்டால் அனுபவிக்கி
றது நாங்கள் தான்
எங்கடை பாதுகாப்புக்
கு அமைதிக்கு சமாதான
த்துக்கு உத்தரவாதம்
கிடைக்கால் இந்தியன்
ஆமி தாராளமாய் போ
கலாம். இதுதானெல்லாம்
ஒருமுறை யோசியும்
நான் வாறன் [illegible]

-[illegible]



படிப்பகம்

www.padippakam.com

## கடலோடி நண்பர்களுக்கு:

தூண்டில் இலம் 18ல் "எழுத்தும் அதிகாரமும்" என்னும் பகுதியில் "பெருஞானம்" பற்றி விமர்சித்திருப்பதற்கு எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். இது பற்றிய நமது கருத்துக்களை தெரிவிக்கவேண்டியது நமது கடமை

எழுத்தும் அதிகாரமும்பற்றி பெருஞானம் எழுதியவற்றை எதுவுமே குறிப்பிடாமல் சம்பந்தமே இல்லாத இந்திய இராணுவம்பற்றி நாம் எழுதாமைக்கு தவிர்க்கப்பட்ட காரணங்களை கொண்டு எழுதியுள்ளீர்கள் நல்லவேளை இந்திய இராணுவ அராஜகத்தை நாம் வரவேற்கிறோம் என்று எழுதவில்லை அந்தளவில் சிறு ஆறுதல்

அராஜகம் என்பது இந்திய இராணுவம் வந்ததுடன் திடீரென தோன்றிய ஒன்றல்ல. ஏற்கனவே சிறீலங்கா இராணுவத்தின் அராஜகம், இயக்கங்கள் மீதான அராஜகம், இயக்கங்களுக்குள்ளான அராஜகம் இயக்கங்களுக்கு இடையிலான அராஜகம், பொதுமக்கள் மீதான இயக்கங்களின் அராஜகம், இந்திய இராணுவத்தின் அராஜகம், இந்திய இராணுவம் போனபின் சிறீலங்கா இராணுவத்தின் அராஜகம் என இது நீண்டுகொண்டே போகும். எங்களைப்பொறுத்தவரை அராஜகத்தின் மூலவேரை அம்பலப்படுத்தி அழிப்பதற்கு எழுதுவதையே அதிமுக்கியமானதாக கருதுகின்றோம். அதைவிடுத்து காலத்திற்கு காலம் மக்கள் வாயில் வெளிப்படும் சில அராஜகங்களை எழுதி பக்கங்களை நிரப்பி புத்தகம் கொண்டுவர பொறுமை தயாராக இல்லை. அனைத்து அராஜகங்களையும் எதிர்க்கின்ற அதே வேளையில் அராஜகத்தின் மூலவேர் அழிக்கப்படும்போது இத்தகைய அராஜகங்கள் அற்றுப்போகும் என்பதை கருத்தில் கொண்டே நமது எழுத்துக்கள் அமைந்துள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

நாம் சார்ந்துள்ள இயக்கத்திற்கு சார்பாக நியாயப்படுத்தும் முயற்சியில் உண்மைகளை மறைத்தல் அல்லது திரித்துக் கொள்ளாமலிருத்தல் என்று குறிப்பிடுகின்றீர்கள். நாம் எந்தவொரு கொள்கையுமற்ற எவ்வித இயக்கங்களையும் சாரவில்லையென்று சொல்லிக் கொண்டு எழுதவில்லை. எங்களைப் பொறுத்தவரை உறுதியான கொள்கையுடன் இயக்கமொன்றின் கருத்துக்களை வலுப்படுத்தவே எழுதுகின்றோம். அதுதான் உலக பாட்டாளி இயக்கம். அது உலகின் எந்த மூலையிலிருந்தாலும் நாம் வரவேற்போம். அதன் பிரதிபலிப்பு தேச மக்கள் மத்தியிலிருந்தாலென்ன இலங்கைத் தீவில் இருந்தாலென்ன அதன் கொள்கையுடன் நாம் ஒத்துப்போவதால் நாம் அதை வலுப்படுத்துவோம். வெறும் வதந்திகளை வைத்துக்கொண்டு இதுதான் உண்மைகள் என்று எழுத தயாராயில்லை. அல்லது கணிப்பின் போக்குகள் குறிப்பிட்டது போல 48% அல்லது 52% ஆக இல்லாது 50க்கு 50 என்று எழுதும் பசப்பு வேலையும் எங்களால் செய்ய முடியாது.

ஜேர்மனியில் வெளிவரும் அநேகமான சஞ்சிகைகள் தமது கொள்கைகளுக்கு சார்பானவர்களுக்கு சார்பாகவே எழுதுகிறார்கள். இதில் நாம் தங்கள் கொள்கைக்கு முரணாகப்பட்டதாலோ என்னவோ எங்களை எழுதியுள்ளீர்கள் அப்படித்தான்.

---

இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் பம்பாய் வெங்காயம் தடை செய்யப்பட வேண்டும் மைசூர் பருப்பு தடை செய்யப்பட வேண்டும் இந்தியத் திரைப்படங்கள் தடை செய்யப்பட வேண்டும். என்று கூறும் இந்திய துவேசவாதிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பௌத்த மதத்தை தடை செய்வார்களா என்று மலையகத் தலைவர் ஒருவர் வெகுளியுடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

---



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் நன்கொடை மோசடியால் பதவியிழப்பு



ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் பொருளாதார ஸ்திரம்மிக்கநாடென்று அழைக்கப்படும் ஜப்பானில் அரசியல் தலைமைத்துவத்தினில் குழப்பம் உருவாகியுள்ளது. ஜப்பானிய பொருத்தவரையில் அரசியல் நன்கொடை மோசடிகள் அந்நாட்டு அரசியலை அவ்வப்போது ஆட்டம் காண வைப்பது உண்டு. இப்போது அதற்கு பொறுப்பாளியாக பிரதமர் தகேஷிட்டா, லொக்ஹீட் என்றழைக்கப்படும் விமான நிறுவனத்திடமிருந்து கோடிக்கணக்கான டாலர்களை அரசியல் நன்கொடைகளாக அவர் பெற்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதமர் தகேஷிட்டா பதவியிழந்துள்ளார்

## சீனத்து சல்மான் ருஷ்டி

முஸ்லிம்களின் பாலியலுறவு பழக்கங்களை வர்ணிக்கும் சீனமொழி புத்தகமொன்றுக்கு எதிராக பீக்கிங்கில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். பாலியல் பழக்கம் என்ற நூலில் இஸ்லாத்தை நிந்திப்பதாக அமைந்துள்ளது என்று அவர்கள் குற்றம் சாட்டினர். சீனாவின் சல்மான் ருஷ்டியான கோகு போலியையும் பிரசுரகர்த்தரான ஷங்காய் பிரசுர நிறுவனத்தினரையும் தண்டிக்க வேண்டு


படிப்பகம்

மக்கள் கோஷம் எழுப்பினர்.

www.padippakam.com

## மே. ஜேர்மனியில் பலத்த வரவேற்பு



அண்மையில் மேற்கு ஜேர்மனிக்கு வருகை தந்திருந்த சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கொர்ப்பசேவ்வினை மக்கள் பலத்த உற்சாகத்துடன் "கோபி" என்ற கோஷம் எழுப்பி வரவேற்றனர். இவர் கலந்துகொண்ட பேச்சுவார்த்தை பொதுஐரோப்பிய இல்லம் உருவாக்கப்பட வேண்டுமென்பதை தெரிவித்தார். மரபான ஆயுதங்கள் பற்றி பாரக்களைதக்கு தீர்வு காணும்வரையில் போர்க்கள அணுஆயுதங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளை தள்ளிப்போட வேண்டுமென்பதை சோவியத் யூனியன் விரும்பவில்லையென்றும் இரண்டையும் இணையாகவே பரிசீலிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். இவருடைய இக்கருத்தானது மேற்கு ஜேர்மன் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பினை பெற்ற குறிப்பிடத்தக்கது

## எல்சல்வடோரில் வலதுசாரி அரசின் அணுகுமுறை

1979ம் ஆண்டிலிருந்து 70,000 மக்களின் உயிர்களைப்பலி கொண்ட சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர புதிய ஜனாதிபதி அல்பிறடோ கிறிஸ்டியானி புதிய அணுகு முறையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். இவ் வலதுசாரி தேசிய குடியரசு அரசாங்கமானது தொழிலாளர், புத்திஜீவிகளின் ஜனநாயக உரிமைகளை மறுத்ததின் விளைவாக இவர்களுடைய போராட்டமுறைகளுக்கு எதிராக



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தை ஒடுக்குவதில் இடதுசாரி F.M.L.N இயக்கமானது புதிய ஜனாதிபதியின் கருத்தை நிராகரித்ததுடன் தமது போராட்டங்களை முன்னெடுத்து செய்து வருகின்றனர்

## மேற்கு ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் வலதுசாரிகள் தோல்வியை தழுவியுள்ளனர்

ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட 12 நாடுகளின் கட்சிகளுள் இடதுசாரிகள் உறுதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சோசலிஸ்டுக்கள், பசுமை புரட்சியாளர்கள், கம்யூனிஸ்ட்கள் போன்றவர்கள் இதனுள் அடங்கும். இவற்றைவிட பிரான்ஸிலும் மே. ஜேர்மனியிலும் பாசிச நோக்கம் கொண்ட கட்சிகள் குறிப்பிடத்தக்களவு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். மற்றைய வலதுசாரிக்கட்சிகள் பெரும்பான்மையான நாடுகளில் தோல்வி தழுவியுள்ளனர்

## அன்பான வாசகர்களே!

“தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் வெகுஜனம்” பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செம்மையாக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு அதிகாரமுண்டு

**வெகுஜனம்”** சந்தாவிபரம்

6 மாதங்களுக்கு 10 DM.

1 வருடத்திற்கு 20 DM.

ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு தபால்செலவு தனி.

அனுப்ப வேண்டிய முகவரி

A. VELAYUTHAM.
MITTWEG STR-21
4300 ESSEN-1; WEST GERMANY

# காவி உடையற்ற துறவிகள்

கவிதை -ரூபன்-

சென்மதிரிய எம் தேசத்தை விட்டு
நிரந்தரமாய்ப் பிரிந்த பின்பு
துயரங்களோ எம் வாழ்க்கைச்
சிறந்து வளர்த்து விடுகிறது

கனவுகளில் எம் மனதில்
கருத்தரித்த விடுதலையோ
கருச்சிதைவாய் இன்று
கலைந்து போன போது
எங்கள் கண்களில் வழிவதோ
வெறுங் கண்ணீரல்ல
எங்கள் நெஞ்சம் பிளந்ததனால்
உதிரும் இரத்தத் துளிகள்

மரணத்தின் செய்திகளை
ஏந்தி வரும் காற்றும்
எம் செவிகளில் மோதிச்
செவிடாக்க நினைக்கிறது.

வாலிபப் பருவத்தின் வனப்பை ரசிக்க
வஞ்சியரின் பின்னால் அலையும் வேளையிலே
நாம்
வஞ்சிக்கப்பட்ட மக்களுக்காய்
வாழ்க்கையை வெறுத்து
வனப்பான இளமையையே
வஞ்சித்தவர்கள்

புத்தரைப்போல் நாங்களும்
வாழ்க்கை வெறுத்ததனால்
போதி மரத்தின் கீழ் இருந்து
ஞானம் பெறவில்லை.

தேசத்தின் கொடுமைகளும்
எம் தோழர்கள் தந்த அரசியல்
போதனைகளுமே
காவி உடை அணியாத எம்
துறவுக்குக் காரணமாம்.

# "நினைவஞ்சலி"



ஸ்ரீ லங்காவில் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மனித உரிமைகளுக்காக பாடுபட்டவரும்;


தமிழ் தகவல் நிலையம் அமைத்து ஜனநாயகத்துக்கும் நீதிக்காகவும் பரந்த அளவில் பணி புரிந்தவரும்;

வடக்கு கிழக்கில் நடைபெற்ற அநீதிகளையும் அராஜகங்களையும் அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் 'சற்றடே றிவியூ' என்னும் பத்திரிகை மூலம், திரு. எஸ் சிவநாயகம் திரு காமினி நவரத்தின ஆகியோருடன் இணைந்து அச்சமின்றி வெளிக் கொணர்ந்தவரும்;

நம்பிக்கையும் நாணயமுமாக நிதிக் கையாள்கையை மேற் கொண்டமையால் ஐரோப்பிய அகதிகள் புனர்வாழ்வு உதவி நிறுவனங்களின் நன்மதிப்பை பெற்றவருமான சமூக சேவையாளர் திரு. கே. கந்தசாமியின் வாழ்க்கை 1988ம் ஆண்டு யூன் 10ம் திகதி அராஜக வாதிகளால் கொடூரமாக பறிக்கப் பட்டது

இவருக்கு "மெஞ்ஞானம்" தனது ஓராண்டு நினைவஞ்சலியை செலுத்துகிறது

www.padippakam.com



# ஐக்கியப்படுவோம்
# போராடுவோம்
# அமைதி காண்போம்



படிப்பகம்